மின்னல் வீரர் மாண்ட்ரேக் தோன்றும்
ராணி
காமிக்ஸ்
வெடி குண்டு
மாளிகை

ராணி காமிக்ஸ்-147
(மாதம் இருமுறை இதழ்)

ஆகஸ்டு 1 15
1990

அமெரிக்க போலீஸ் கமிஷனர்-- தலைமை அலுவலகம்.
அந்த எட்டு கொள்ளையர்களின் அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிக மாகியது!
அப்புறம்! அவர்களை எப்படி சமாளித் தீர்கள்?
சமாளிக்கவில்லை! முழுவதுமாக அழித்துவிட்டோம்! மாண்ட்டிரிக் என்பவர்தான் அந்த கும்பலை அழித்தார்
நான் அவரைப் பார்க்க வேண் டுமே!
சரி! அவரிடம் டுப் பார்க்கி றேன்!
கமிஷனர் மாண்ட்டிரிக்குடன் தொடர்பு கொண்டார்.
மாண்ட்டிரிக்! ஒரு எழுத்தாளர் உங்களை சந்திக்க வேண்டும் என்கிறார்! எட்டு கொள்ளையர்கள் பற்றி புத்தகம் வெளியிடப் போகிறாராம்! அவருடைய பெயர் ராபின்சன்.
அவர் ஒப்புக் கொண்டார்! அங்கு செல்ல வேண்டிய பாதையையும் சொல்கிறேன்!
உங்கள் உதவிக்கு ரொம்ப நன்றி சார்!
எழுத்தாளர் ராபின்சன் விடை பெற்றுச் சென்றார்.
இந்த இளம் வயதிலேயே இவனுக்கு இவ்வளவு ஆர்வமா? பரவா யில்லை!

ராபின்சன், கமிஷனர் சொன்ன ஜாண்டு என்ற இடத்துக்கு நேராக வந்தான். காம்பவுண்டு வாசலில் கம்பிக் கதவு பூட்டியிருந்தது. ஆனால் உள்ளே இருந்து ஒரு குரல் வந்தது.
யார் நீ? எதற்காக இங்கே வந்திருக்கிறாய்!
என் பெயர் ராபின்சன்! நான் ஒரு எழுத்தாளன்! கமிஷனர் சொல்லியிருப்பாரே!
வாசலில் ஒரு காமிரா படம் பிடித்துக்கொண்டிருந்தது
பங்களாவில் மாண்ட்டிரிக்கும் அவருடைய நண்பர் லோதரும், வாசலில் நடப்பதை டி.வி.யில் பார்த்தார்கள்.
கொள்ளையர்களைப் பற்றி மாண்ட்டிரிக்கிடம் கேட்க வேண்டும்!
லோதர்! அவனை உள்ளே அனுப்பு!
உள்ளே செல்லலாம்! ஆனால்; 20 கி.மீ. வேகத்தில்தான் செல்ல வேண்டும்!
ஓ.கே. சார்!
ராபின்சனின் கார் அந்த காம்பவுண்ட்டுக்குள் நுழைந்து ஒரே வேகத்தில் சீராக போனது.
காரை நிறுத்தாதே! அதே வேகத்தில் போ!
வழியில் மலைப்பாதையில் ஒரு பெரிய பிளவு இருந்தது.
அய்யோ! அது எப்படி..
ஒலிபெருக்கியில் குரல் ஒலித்தது.


ஆ...! என்ன இது சுவர் எழும்புகிறது.
வேகத்தைக் குறைக்காதே!
திடீரென்று தரையில் இருந்து ஒரு சுவர் எழும்பியது.
அட அதற்குள் பின்னால் பிளவு ஏற்பட்டு விட்டதே!
காரின் வேகத்தை குறைக்காதே! அப்படியே வா!
ஒலிபெருக்கியில் எப்படி வரவேண்டும் என்பதை ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள்.
அட, சுவர் அந்த பிளவை மூடிவிட்டதே! இனி பயப்படாமல் செல்லலாம்!
அடுத்து ஒரு குகை இருந்தது.
குகையின் கதவு தானாக திறக்கிறதே!
கார் அந்த குகைக்குள் நுழைந்தது.
நான் வந்தபிறகு சுவர் விலகி, மீண்டும் பிளவு ஏற்பட்டு விட்டதே!

ராபின்சனின் கார் குகைக்குள் வந்ததும் குகையின் கதவு மீண்டும் பூட்டிக் கொண்டது.
காரின் வேகத்தைக் குறைக்காதே! ம்... போ!
அங்கும் ஒலிபெருக்கி இருந்தது.
ராபின்சன்! வாருங்கள்!
ஓ...! நீங்கள்தான் மாண்ட்டிரிக்கா!
ஒருவர் ராபின்சன்னை வரவேற்றான்.
இல்லை, நான் ஜோமா! வாருங்கள மாண்ட்டிரிக்கை பார்க்கலாம்!
எதிரிகள் இங்கு எளிதில் நுழையவே முடியாது!
எதிரிகள் எங்களையும் இந்த இடத்தையும் அழிக்க முயலுகிறார்கள். அதுதான் இந்த ஏற்பாடுகள்!
மாண்ட்டிரிக் வெளியே வந்தார்.
ராபின்சன் நான் மாண்ட்டிரிக்! இவன் என் நண்பன் லோதர்.
எட்டு கொள்ளையர் களைப் பற்றி நீ என்ன தெரிந்துகொள்ள வேண்டும்!
எனக்கு அவர்களைப் பற்றிய முழு விவரம் வேண்டும்!

நர்தாவுக்குத்தான் முழுவிவரம் தெரியும்!
இல்லை! எனக்குத் தெரியாது!
யார் அந்த 8 பேர்கள்?
அவர்கள் உலகம் முழுக்க போதை மாத்திரைகள், சூதாட்டம், கொலை, கொள்ளை என்று எதையுமே விட்டுப் வைப்பதில்லை!
8 பேர் அடங்கிய கூட்டத் துக்கு தலைவர் என்று குறிப்பிடும்படி எவரும் கிடையாது. ஆனால் அவர்கள் அக்டோபஸ் போன்ற உருவத்தை தலைவராக நினைத்து அதை அக்டன் என்று அழைக்கிறார்கள்! அக்டனின் பின்னணி மர்மமான ஒன்று!
அவர்கள் 8 பேர்தான் என்று நினைத்தால் நமக்குத்தான் ஏமாற்றம்.
ஒரு குழுவை அழித்தால், அக்டன் புதிதாக ஒரு குழுவை உண்டாக்கி விடுகிறது!
அவர் களுக்குள் யாராவது தவறு செய்தால் கடுமையாக தண்டிக்கப் படுவார்கள்.
ராய்! நீ துரோகம் செய்துவிட்டாய்! அதனா...ல்...
ஆ...!

அடுத்த விநாடியே அவன் வெடிகுண்டுக்கு பலி ஆகிவிடுவான்
டமார்...!
இந்தக் கொள்ளையர்கள் ஒரு இடத்தில் தனது கைவரிசையை காட்டிவிட்டால் அந்த இடத்தில் 8 என்ற அடையாளம் இருக்கும்!
அப்படியா?
ஒரு இடத்தில் கொலையும், கொள்ளையும் நடத்தப் போகிறார்கள் என்றால்...!
எல்லாம் முடிந்ததும் அந்த இடத்தில் எட்டு என்ற அடையாளம் இருக்கும்!
அது அவர்களின் விதி அப்படித்தானே! அதுசரி அந்த அக்டன் எனபது யார்?
நானும் பார்த்ததில்லை. கேள்விப் பட்டு இருக்கிறேன்! அவர்களை கண்டுபிடிப்பது என்பது சுலபமல்ல!
திரையில் அக்டோபஸ் படம் இருக்கும்! ஆனால் பின்னால் இருந்து குரல் மட்டும் வரும்!
சல்மா! எழுந்திரு!

சல்மா! தப்பு செய்துவிட்டான் என்றால் அந்த இடத்திலேயே தண்டனை வழங்கப் படும்.
திரையில் இருந்தே குண்டுகள் பாய்ந்து வரும்!
8 பேர் இருப் பதனால்தான் அக்டோபசை சின்னமாக வைத்திருக் கிறார்கள்.
அந்த 8 பேரை பற்றிய இரகசியத்தை கமிஷனர்தான் சொல்ல வேண்டும்!
ஆமாம்! நீங்கள்தான் அந்த 8 பேரையும் அழித்ததாக கமிஷனர் கூறினார்!
மாண்ட்டிரிக் சொல்லச் சொல்ல ராபின்சன் குறிப்பு எடுத்துக் கொண்டான்.
நான் மட்டுமல்ல! லோதரும் நானும் சேர்ந்து 5 பேரை அழித்தோம்!
மற்றவர்கள் என்ன ஆனார்கள்!
மீதிப்பேர் இன்னும் இருக்கிறார்கள்! அவர் களைத்தான் தேடிக்கொண் டிருக்கிறேன்!
8 பேரில் எத்தனை தலைகள் குறைந்தாலும் புதிதாக தலைகள் வரும் என்று கமிஷனர் சொன்னாரே!
இல்லை ராபின்சன்! அப்படி இருக்காது!

அந்த 8 பேரில் 5 பேரை நான் அழித்துவிட்டேன்! இன்னும் மூன்று பேர்கள்தான் பாக்கி!
அந்த மூவரையும் தேடிக் கொண்டுதான் இருக்கிறீர்களா?
ஆமாம்! அவர்களை விட மாட்டேன்!
ராபின்சன் தான் கொண்டுவந்த சூட்கேசில் ஒரு பட்டனை அழுத்தினான்.
மாண்ட்டிரிக்! எனக்கு உதவியதற்கு மிக்க நன்றி!
புத்தகத்தை எழுதி முடித்ததும் ஒரு இதழை அனுப்பி வையுங்கள்!
ஓ.கே.! நான் வருகிறேன்!
ராபின்சன் அவர்களிட மிருந்து விடைபெற்றான்.
அப்போது—
பொறுங்கள்! உங்கள் சூட்கேசை விட்டுச் செல்கிறீர்கள்!
நர்தா அந்த பெட்டியைப் பார்த்தாள்.

உடனே லோதர் அந்த பெட்டியை எடுத்து ராபினசனிடம் கொடுத்தான்.
!
இந்தாருங்கள் உங்கள் பெட்டி!
நன்றி! எனக்கு இந்தப் பெட்டி தேவையில்லை!
ராபின்சன் பெட்டியை அவர்களை நோக்கி வீசிவிட்டு காரை கிளப்பினான்.
லோதர் யோசித்தான்.
எதற்காக பெட்டியை விட்டுச் செல்கிறான்?
ராபின்சன்! அவன் ஒரு கொள்ளைக் காரன்!
திடீரென்று மாண்ட்டிரிக் பாய்ந்து வந்து லோதரிடம் இருந்த சூட்கேசை பறித்தார்.
லோதர்! விரைவாகச் சென்று குகைக் கதவை மூடு!
அனைவரும் கீழே படுத்துக் கொள்ளுங்கள்...!
மாண்ட்டிரிக் சூட்கேசை தூக்கிக்கொண்டு ஓடினார்.

தெரியவில்லை! நர்தா! தலையை தூக்காதே!
மாண்ட்டிரிக் மலை விளிம்புக்குச் சென்று அந்த சூட்கேசை பள்ளத்துக்குள் வீசினார்.
அடுத்த நிமிடம்-
டமார்...!
சூட்கேசில் இருந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறியது.
டமால்
எழுத்தாளராக வந்த ராபின்சன் 8 கொள்ளைக்காரர்களில் ஒருவன். அதனால்தான் சூட்கேசில் வெடிகுண்டை வைத்து மாண்ட்டிரிக்கை அழிக்க வந்திருக்கிறான்.
டமார்...!
அந்த பாதையில் ராபின்சனின் கார் புயலாய் சீறிப் பாய்ந்துகொண்டிருந்தது.

காரில் தப்பிச் சென்றுகொண்டிருந்த ராபின்சன், வெடிகுண்டு சத்தத்தைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான்.
ஹா... ஹா...!
அகோரமாய் சிரித்தான்.
ஜோமா...! குகையின் கதவை விரைவாக அடைத்து வை!
மாண்ட்டிரிக் குகையில் இருக்கும் ஜோமாவுடன் தொடர்புகொண்டார்
மாண்ட்டிரிக் இடத்தில் வெடிகுண்டு வெடித்த அதேநேரம், மேலே ஒரு விமானம் பறந்து கொண்டிருந்தது.
VOOM
வெடிகுண்டு வெடித்துவிட்டது! ராபின்சன் வேலையை முடித்து விட்டான்!
மாண்ட்டிரிக் எமலோகம் சென்றிருப்பான்!
ஆமாம்!
உடனே அக்டனுக்கு தகவல் கொடுக்க வேண்டும்!
ராபின்சனின் கார் குகைப் பாதையில் பறந்து வந்தது.
இனி இந்த முட்டாள் தனமான பாதையை கடக்க வேண்டும்!
குகை வாயிலில் ஜோமா தயாராய் இருந்தான்.
அதோ! அவன் வந்து விட்டான்!

ராபின்சனின் கார் அருகில் வர, ஜோமா குகையின் கதவை கீழே இறக்கினான். அதற்குள்—
CLANK
ராபின்சனின் கார் ராக்கெட் வேகத்தில் குகை வாசலை தாண்டி வெளியே வந்துவிட்டது!
முட்டாள்! என்னிடமே உன் வேலையை காட்டுகிறாயா?
அடுத்து மலைப் பாதைக்கு வந்தான்.
சே...! தப்பிவிட்டானே!
ஜோமா வேதனைப் பட்டான்.
மலைப் பாதையில் பிளவுகளில் இருந்து வெளிப்பட்ட சுவர் ராபின்சனுக்கு பாதைவிட மறுத்தது.
இர்...ர்...ா...ர்...!
என்ன சுவர் நகரவில்லை!
வந்த வேகத்தில் காரை பிரேக் அடித்தான்.
பங்களாவில் இருந்துகொண்டு, இந்த சுவரை இயக்குகிறார்கள்!
ராபின்சன் சுவர் ஏறிக் குதிக்க முயன்றான்.
சுவர் இருந்தால் என்னால் தப்பிக்க முடியாதா?

சுவருக்கு அந்தப் பக்கம் லோதர் தயாராய் நின்றுகொண்டிருந்தான்
வா ராபின்சன்! வெள்ளைக்கார நாயே!
அங்கே—
லோதர் அவனை மடக்க போய் இருக்கிறான்! பார்த்து வருகிறேன்.
மாண்ட்டிரீக் ஓடிவந்தார்.
மாண்ட்டிரிக ஜாக்கிரதை!
டேய்! பொடிப் பயலே! கீழே குதிடா!
யாரடா குதிக்க வேண்டும்! சாகப்போகிறது நீதான்! உன்னை...!
ராபின்சன் பையில் இருந்து துப்பாக்கியை ஒத்து லோதரை குறி வைத்தான்.

ஏய்...! கிட்டே வராதே! சுட்டு விடுவேன்!
ராபின்சன்! விளையாட்டு வேண்டாம்!
குகையில் இருந்த ஜோமா டி.வி.யில் நடப்பதை பார்த்தான்.
வசமாக மாட்டிக் கொண்டான்!
ஜோமா சுவரின் இணைப்பை திருப்பினான்.
அடுத்த நிமிடம்—
ஆ... என்ன இது?
ராபின்சன் ஆட்டம் கொண்டான்.
ஜோமா சுவரை வேகமாக அசைத்தான்.
ராபின்சன் நிற்கமுடியாமல் தள்ளாடி விழுந்தான்.
ஆ...!

கீழே விழுந்த ராபின்சனை லோதர் பிடித்துக்கொண்டான்.
அப்படி வாடா!
என்னை விடு!
அப்போது மாண்ட்டிரிக் மலைப் பாதையில் ஓடிவந்தார்.
லோதர்! அவன் வேறு வெடிகுண்டு வைத்திருந்தாலும் வைத்திருப்பான்! எச்சரிக்கை!
லோதர் ராபின்சனை பந்தாடினான்.
முட்டாளே! சூட்கேசுக்குள் வெடிகுண்டை வைத்து எங்களை கொல்லவா பார்க்கிறாய்...?
பளார்...!
ஆ... அம்மா!
லோதர்! அவசரப் படாதே! நான் வருகிறேன்!
மாண்ட்டிரிக் வேகமாக ஓடிவந்தார்.
அதற்குள் ராபின்சன், கோர்ட் பாக்கெட்டுக்குள் கையை விட்டான்.

லோதர்! அவன் வெடிகுண்டை எடுக்கிறான் பார்!
உடனே லோதர் ராபின்சனின் கையை பற்றினான்.
வலி தாங்காமல் ராபின்சன் அலறினான்!
ஆ....!
இவனிடம் வேறு வெடிகுண்டு இருக்கின் றனவா?
தன்னை பாதுகாத்துக் கொள்ள நிச்சயம் வைத்திருப்பான்!
அதை வைத்து நம்மையும் அழித்துவிட்டு அவனும் அழிந்து போவான்!
உடனே லோதர், ராபின்சனை காலை பிடித்து தலைகீழாக தூக்கினான்.
துப்பாக்கி, கத்தியை தவிர வேறு எதுவும் இல்லையே!
கோர்ட்டுக்குள் இருந்து துப்பாக்கி, கத்திகள் கீழே விழுந்தது.

அடுத்து, மாண்ட்டிரிக் கமிஷனருடன் தொடர்பு கொண்டார்.
கமிஷனர் நீங்கள் அனுப்பிய ஆள்...!
ஒரு
கொள்ளை
புத்தகம்
போகிறான்!
அவன் என்னை வெடிகுண்டு வைத்து அழிக்க முயன்றான்!
ராபின்சனா! ஒருவேளை அவனும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவன்தானா?
கமிஷனர் சார்! ஒரு கொள்ளையனை என்னிடத்தில் அனுப்பி வைத்திருக்கிறீர்கள்.
அவன் எழுத்தாளன் என்று ஆர்வத்துடன் சொன்னான். நம்பிவிட்டேன்!
உன் இடத்திற்கு வரும் இரகசிய வழியை வேறு யாரிடமும் சொல்லவில்லை!
ஓ.கே. சார்!

அந்த அயோக்கியன் இப்போது எங்கிருக்கிறான்?
இங்கேதான் என் பாதுகாப்பில் இருக்கிறான்!
மாண்ட்டிரிக் தொடர்பை துண்டித்தார்.
அந்தக் கூட்டத்தை முழுவதுமாக அழிக்க வில்லை என்று நான் பலமுறை சொல்லி விட்டேன்!
ஆனால், கமிஷனர், கேட்க மறுத்து விட்டார்!
இப்போது அந்த கும்பல் இருப்பது உறுதியாகி விட்டது. அதனால்தான் என்னை கொலை செய்ய ஆள் அனுப்பியிருக் கிறார்கள்!
ராபின்சன் இடுப்பில் மறைத்து வைத் திருந்த மற்றொரு வெடிகுண்டை லோதர் தேடி எடுத்து தூக்கி பள்ளத்துக்குள் வீசினான்.
டமார்...!

ஏய்...! ராபின்சன் அடுத்த வெடி குண்டையும் வெடித்து விட்டான்!
மாண்ட்டிரிக் இத்தோடு தொலைந்தான்!
கொள்ளையர்கள்
இருந்து
கொண்டிருந்தார்கள்.
இல்லை! அவன்
வில்லை! உயிரோடு
இருக்கிறான்.
வா, அக்டனுக்கு தகவல் கொடுப்போம்!
கேட்கிற கேள்விக்கு மரியாதையாக பதில் சொல்! நீ யார்? எப்படி அந்தக் கூட்டத்துடன் சேர்ந்தாய்?
நான் உண்மையிலேயே கொள்ளைக்காரன் இல்லை!
என்னை அவர்கள் கடத்திச் சென்று மிரட்டி, இங்கு அனுப்பி வைத்தார்கள்!
நான் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண் டிருக்கிறேன்!
ராபின்சன் நடந்ததை சொன்னான்.

சொல்கிறான்
? ஏதேதோ
றுகிறான்!
அதுதான் எனக்கும் புரியவில்லை!
என்னை கொல்லச் சொல்லி உன்னை அனுப்பியது யார்?
இல்லை! நான் சொல்ல மாட்டேன்!
உயிருக்கு பயந்து உண்மையைச் சொல்ல மறுக்கிறான்!
ஆமாம் மாண்ட்டிரிக்!
இங்கே பார்! போலீஸ் வருவதற்குள் உண்மையைச் சொல்லிவிடு! பிறகு அவர்கள் உன்னை கவனித்துக் கொள்வார்கள்!
பரவா யில்லை!
விமானத்தில் வந்தவர்கள் அக்டனுக்கு தகவல் கொடுத்தார்கள்.
அக்டன்! நம் திட்டம் மாண்ட்டிரிக்கிடம் நடக்கவில்லை! ராபின்சனை பிடித்து விட்டான்!
கொள்ளைக் கூடத்தில்—
வெடிகுண்டில் தப்பிவிட்டால் விஷவாயுவை உபயோகியுங்கள்!
அக்டன் கட்டளையிட்டது.

உனக்கு தகுந்த பாதுகாப்பு தருகிறேன்! அந்த கூட்டத்தை பற்றிய உண்மையைச் சொல்!
எனக்கு பாதுகாப்பு வேண்டாம்!
நான் இருக்கப் போவது இன்னும் கொஞ்சம் நாள் தான்! அவர்களே என்னை கொன்றுவிடுவார்கள்!
அதோ அவர்கள் வந்து விட்டார்கள்!
?
அப்போது போன விமானம் திரும்பி வந்தது.
இது யாருடைய விமானம்?
8 கொள் ளையர் களுடைய விமானம்!

வாருங்கள்! வெடிகுண்டை தூக்கிப் போட்டாலும் போடுவார்கள்! சீக்கிரம் ஓடிவாருங்கள்.
நாம் யாருமே அவர்களிடமிருந்து தப்பிக்க முடியாது!
!
!
விமானம் அவர்களை விரட்டியது.
பங்களாவுக்குள் வந்த மாண்ட்டிரிக் கமிஷனருடன் தொடர்பு கொண்டார்.
கமிஷனர் சார்! கொள்ளையர்களின் விமானம் இங்கு முற்றுகையிட்டு இருக்கிறது.
உடனே ஒரு கெலிகாப்டரை அனுப்புங்கள்! அவசரம்!
இந்த இடம்தான்! குண்டைத் தூக்கி போடு!
உடனே விமானத்தில் இருந்து குண்டைத் தூக்கி வீசினார்கள்.
குண்டு தோட்டத்தில் போடப்பட்டிருந்த மேசை மீது விழுந்தது.
பங்களாவுக்குள் இருந்து மாண்ட்டிரிக்கும் மற்றவர்களும் தோட்டத்தில் நடப்பதை டி.வி.யில் பார்த்தார்கள்.
குண்டு வெடிக்கவில்லையே!
புகையும் வரவில்லை!

ஒருவேளை விஷவாயு வெடி குண்டாக இருக்கும்!
நாம் அனைவரும் செத்தோம்!
நாம் இங்கேயே இருந்துவிடுவோம்! யாரும் வெளியில் போக வேண்டாம்!
சந்தேகமே இல்லை! அது விஷ வாயுவுதான்! தோட்டத்தில் பறக்கின்ற பறவைகளை பார்!
??
அனைவரும் வியப்போடு பார்த்தார்கள்.
பறவைகள் ஒவ்வொன்றும், தரையில் செத்து விழுந்தன.
கடுமையான விஷவாயு! என்னைக் கொல்வதற்கு இது அடுத்தகட்ட நடவடிக்கை!
ஆமாம்!
தோட்டத்தில் உள்ள செடிகள், பூக்கள் கூட வாடி வதங்கின.
அங்கே பார்! முயல் கூட செத்து விழுந்துவிட்டது!

நம் இடத்தை சுற்றிலும் விஷவாயு குண்டை போட்டு இருப்பார்கள்! நாம் வெளியே தலையைக் கூட காட்ட முடியாது!
நர்தா! மரத்தில் ஓடிக்கொண்டிருந்த அணிலைப் பார்!
இந்த வாயு எவ்வளவு நேரத்துக்கு இப்படியே இருக்கும்?
அணில் ஒன்று செத்து, தலைகீழாக விழுந்தது.
மாண்ட்டிரிக் கமிஷனருக்கு போன் செய்தார்.
கொள்ளையர்கள் என் தோட்டத்தில் விஷவாயு குண்டை போட்டு விட்டார்கள்!
அப்படி நீங்கள் உள்ளே இருங்கள். இரண்டு வாயு அகற்றி கெலி காப்டரை அனுப்பி வைக்கிறேன்!
கொள்ளையர்கள் விமானத்தை காவல் துறை கெலிகாப்டர் விரட்டியது.
ஏய்...! மரியாதையாக விமானத்தை தரை இறக்குங்கள்!
போலீஸ்! என்ன செய்வது?
POLICE
அக்டனிடம் கேட்போம்!
அலோ! அக்டனுடன் தொடர்பு கொடுங்கள்!

சார்! போலிஸ் கெலிகாப்டர் ஒன்று எங்களை பின் தொடர்ந்து வருகிறது. தரை இறங்கச் சொல்கிறார்கள்.
நீங்கள் பரவாயில்லை! அழித்துவி திரும்புங்கள்!
அக்டன் அவர்களுக்கு கட்டளை யிட்டது.
போலீஸ் கமிஷனர் நம்மை சுற்றி இருக்கும் விஷவாயுவை அகற்ற இரண்டு கெலிகாப்டரை அனுப்பி வைக்கிறார்.
இனி கவலை யில்லை!
அதுதான் கொள்ளையர்களிடம் நடக்காது! அவர்கள் போலீஸ் கெலிகாப்டரை நாசமாக்கிவிடுவார்கள்!
வானத்தில்-
ஏய்...! அவர்கள் நம்மை நோக்கி சுடுகிறார்கள்!

ஆபத்து! உடனே பாராசூட்டை அணிந்துகொண்டு குதி!
போலீஸ்காரர்களு குதித்தார்கள்.
அக்டன்! போலீசார் கெலிகாப்டரில் இருந்து பாராசூட்டுடன் குதித்துவிட்டார்கள்.
விடாதீர்கள்! விரட்டுங்கள்! அவர்களை அழித்து விடுங்கள்!
அக்டன் உறுதியுடன் கூறியது.
அக்டன் கட்டளையிட்டதும், விமானம், போலீசாரை விரட்டி விரட்டி சுட்டார்கள்.
விடாதீர்கள்! விரட்டுங்கள்!
கொள்ளைக்கார நாய்கள் நம்மை நோக்கி சுடுகிறார்கள்! நாமும் சுடுவோம்!
டுமீல்...!
டுமீல்...

இத்தோடு தொலைந் தார்கள்!
போலீசார் வைத்த குறியில் விமானம் தப்பவில்லை.
டுமீல்...! டுமீல்...!
தெரியாது.
டமார்...! டமார்...!
எதிரி விமானத்தை வீழ்த்திவிட்டோம்!
போலீசார் இருவரும் குதூகலமடைந்தார்கள்.
அடுத்து, இரண்டு வாயு அகற்றி காப்டர் விமானங்கள் மாண்ட்டி
இடத்தை நோக்கி பறந்து வந்தன.
மாண்ட்டிரிக் டி.வி.யில் கெலிகாப்டர்கள் வருவதை பார்த்தார்.
விஷவாயுவை அப்புறப்படுத்த வருகின்றன!
அப்புறப்படுத்தி விடுவார்களா?
போலீஸ் கெலிகாப்டரில் இருந்து விஷவாயுவை முறிக்கக்கூடிய தோட்டம் முழுக்க பாய்ச்சினார்கள்.

இவர்கள் என்ன செய்கிறார்கள்?
விஷவாயுவின் சக்தியை செயலிழக்கச் செய்கிறார்கள்.
அப்போது டெலிபோன் அலறியது!
கமிஷனர் பேசினார்.
நம் ஆட்கள் எதிரிகளின் விமானத்தை வீழ்த்தி விட்டார்கள்!
அப்படியா?
கெலிகாப்டர் விமானம், கொஞ்சம் கொஞ்சமாக விஷவாயுவை முறியடித்துக் கொண்டிருந்தது.
கெலிகாட்டரில் இருந்து இறங்கிய போலீசார் மாண்ட்டிரிக் பங்களாவை நோக்கி வந்தார்கள்.
விஷவாயு தாக்கிவிடக்கூடாது என்பதற்காக கவசம் அணிந்திருந்தார்கள்.
விஷவாயுவை அகற்றிவிட்டோம்! இனி நீங்கள் வெளியே வரலாம்!
வெரிகுட்!

ஒரு விமானம் விஷவாயு வெடிகுண்டை போட்டு போனதா? ஏன்?
இது இரகசியச் செய்தி! கமிஷனரிடம் கேளுங்கள்!
நான் இதை சோதனைக்கு அனுப்பி வைக்கிறேன்!
வெடிகுண்டின ஒரு பகுதியை எடுத்துக் கொண்டார்.
விஷவாயு தாக்கி செத்துப்போன பறவை யையும், தாவரங்களை யும் எடுத்துக் கொண் டார்.
கொள்ளையர்கள் விமாத்தை சுட்டு வீழ்த்தி விட்டு இரு போலீசார் பாராசூட்டில் இறங்கினார்கள்.
ஏய்...! கமிஷனர் நம்மை பார்க்க வருகிறார்.
அப்போது, கமிஷனர் அங்கு வந்தார்.
பரவாயில்லை! கொள்ளையர்கள் விமானத்தை வீழ்த்திவிட்டீர்கள். உங்களுக்கு அவார்டு கிடைக்க சிபாரிசு செய்கிறேன்!
எங்கள் இருவருக்கும் சேர்த்துதானே?

அடுத்து கமிஷனர் மாண்ட்டிரிக்கை பார்க்க வந்தார்.
விஷகுண்டை வீசியவர்கள், நிச்சயமாக அந்த எட்டு கொள்ளையர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறாயா?
அதிலென்ன சந்தேகம் சார்?
கொள்ளையர்கள் விமானத்தை சுட்டு வீழ்த்திய இரு போலீசாரையும் டி.வி.யில் பேட்டி கண்டார்கள்.
நீங்கள் இருவரும் ஆகாயத்தில் ஒரு பெரிய புரட்சி செய்திருக்கிறீர்கள்.
உங்களுக்கு கண்டிப்பாக அவார்டு கிடைக்கும்!
இதற்குமுன் வேறு ஏதாவது அவார்டு வாங்கியிருக்கிறீர்களா?
இல்லை!
விஷ குண்டை வீசியவர்கள் யார் என்று கண்டுபிடித்து விட்டீர்களா?
கமிஷனருக்கு போன் மேல் போன் வந்து கொண்டிருந்தது.

இதன் வாயை நம்மால் அடைக்க முடியவில்லை. விஷ குண்டுவைப் பற்றித் தான் கேட்கிறார்கள்.
டிரிங்...! டிரிங்...! டிரிங்...!
கொள்ளைக் கூட்டத்தில்-
நம்மைப் பற்றி தெரிந்தவர்கள் யாரையும் உயிரோடு விடக்கூடாது! குறிப்பாக மாண்ட்டிரிக்கு வாழவே கூடாது!
கமிஷனர் ராபின்சனை விசாரித்தார்.
மரியாதையாக சொல்லிவிடு. யார் அந்த 8 பேர்?
எனக்குத் தெரியாது.
நானும் பலமுறை கேட்டுவிட்டேன்! வாயை திறக்க வில்லை!
இவனுக்கு ஹிப்னாட் டிசம் முறையை பயன் படுத்தினால் உண்மையை சொல்லி விடுவான்!
வேண்டாம்!
ராபின்சனுக்கு ஹிப்னாட்டிசம் செய்யப்பட்டது.
ராபின்சன் அந்த 8 கொள்ளையர் களைப் பற்றி கொஞ்சம் நினைத்துப் பார்!
இன்னும் நினைவுக்கு வரவில்லை போலும்!

"ராபின்சன்"
தலைவன் அக்டனை நினைத்து பார்!
அவன் அக்டனை பார்த்திருக்கவே முடியாது!
என்னை கொல்லச் சொன்னது யார்? எங்கே வைத்து சொன்னார்கள்?
ஒருநாள் கதவுக்கடியில் இருந்து ஒரு கவர் வந்தது.
ம்...! நன்றாக ஞாபகப்படுத்திச் சொல்! அந்த கொள்ளையர்கள் உன்னை என்ன செய்தார்கள்?
ஹிப்னாட்டிசம், ராபின்சனிடம் வேலை செய்தது. திரையில் இரண்டு உருவம் தெரிந்தது.
மாண்ட்டிரிக்! யார் இவர்கள்?
டாக்டரும், நர்சும்! ஆபரேசன் தியேட்டர் வேறு தெரிகிறது.

ராபின்சன் எழுந்திரு!
என்னைக் கொல்லச் சொல்லி ஒரு கடிதம் கதவுக்கடியில் இருந்து வந்தது!
அது எப்படி உனக்குத் தெரியும்?
ராபின்சன் குழம்பிப் போனான்.
உனக்கு எதற்காக ஆபரேஷன் செய்தார்கள்?
எனக்குத் ஞாபக மில்லை!
இப்படிக் கேட்டால் சொல்லு மாட்டான்!
அவனை உள்ளே அழைத்துப் போ!
இல்லை சார்! இப்போது உண்மையை சொல்லி விடுவான்!
டிக்...! டிக்...!
வெளியில் ஒரு மர்ம மனிதன் கோடில் இருந்து ஒன்றை எடுத்தான்.
மரியாதையாக அவர்கள் எங்கு மறைந்திருக் கிறார்கள் என்பதைச் சொல்லிவிடு!
என்னை நம்புங்கள்! எனக்கு எதுவுமே தெரியவில்லை!

டிக்...!
டிக்...!
பயப்படாதே!
உனக்கு நாங்கள்
பாதுகாப்பு தருகிறே
உண்மையைச்
சொல்!
வெளியில் இருந்த மர்ம மனிதன் ஒரு சிறிய வெடிகுண்டு பார்சலை...
வெண்டிலேட்டர் வழியாக கமிஷனர் அறைக்குள் வீசினான். வீசிவிட்டு தலைதெறிக்க ஓட்டம் பிடித்தான்.
வெடிகுண்டு, உள்ளே இருந்த மாண்ட்டிரிக் மற்றும் கமிஷனர் முன் விழுந்தது.
டிக்...!
டிக்...!
என்ன இது?
ஓடுங்கள்!
வெடிகுண்டு!
அடுத்த நிமிடம்- வெடிகுண்டு பயங்கரமாக வெடித்துச் சிதறியது.
மாண்ட்டிரிக், ராபின்சனை இழுத்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார்.

கமிஷனர் அறை வெடிகுண்டுக்கு பலியாகி சுக்குநூறாகிப் போனது.
டமால்
வெடிகுண்டை வீசிய மர்ம மனிதனை காவலாளி ஒருவன் மடக்கினான்.
படார்....!
ஏய்...! யார் நீ?
மர்ம மனிதன் காவலாளியை துப்பாக்கியால் தாக்கிவிட்டு காரில் ஏறி பறந்து போனான்.
வெடி சத்தத்தைக் கேட்டு கமிஷனர் அலுவலகமே கலவரமடைந்தது.
கமிஷனர் என்ன நடந்தது?
வெடிகுண்டு வெடித்தது!
கொள்ளையர்களாகத்தான் இருக்கும்!
மாண்ட்டிரிக் வராண்டாவுக்கு வந்தார்.
யாராவது இவ்வழியாக தப்பி ஓடினார்களா?
ஆமாம்! ஒருவன் காரிலேறி பறந்து விட்டான்!
அய்யோ! என் ஆபீஸ் காலாவதியாகி விட்டதே!
முதலில் கொலையாளியை பிடிக்க வேண்டும். ஆபீசை பிறகு பார்க்கலாம்.

எதற்காக இப்படிச் செய்தார்கள்?
ராபின்சனை நாம் கைதியாக வைத்திருக்கும் செய்தி கொள்ளையர்களுக்கு தெரிந் திருக்கும்?
ராபின்சன் இங்கிருப்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?
என்னைக் கொல்ல அவனை அனுப்பி வைத்துவிட்டு அவர்கள் அவனை பின்தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்!
இவன் உண்மையை கூறிவிட்டால், அந்தக் கூட்டத்தை கூண்டோடு பிடித்து விடலாம்!
என்ன கேட்டாலும் தெரியாது என்ற பதில்தான் வரும்!
அதற்கு ஒரு வழியிருக்கிறது!
இவனுடைய உடை அனைத்தையும் கழட்டுங்கள்!
ஏன்?

இவனுடைய உடையை ஆராய்ந்தால் ஏதாவது தடயம் கிடைக்கலாம்!
உடனே ரா
அணிந்திருந்த
உடைகளை
னார்கள்.
மாண்ட்டிரிக்! அவன் உடையை ஆராய்வது வேண்டாத ஒன்று!
இல்லை சார்! கொள்ளையர்களைப் பற்றிய ஒரு சிறு துப்பு கிடைத்தால்கூட போதும்! எளிதில் மடக்கி விடலாம்
மாண்ட்டிரிக் ராபின்சன் அணிந்திருந்த கோர்ட், பேண்ட், டை, சூ அனைத்தையும் சோதனை போட்டார்.
ஒன்றும் கிடைக்கவில்லை! அடுத்து இவனை ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்!
எதற்காக?

ராபின்சனை மருத்துவமனைக்கு கொண்டுவந்தார்கள்.
இவன் உடம்பில் ஒரு இடம் விடாமல் முழுவதும் எக்ஸ்ரே எடுங்கள்!
3 டி ஸ்கேன்! எதற்காக?
மூன்று பக்க மிருந்தும் படம் எடுக்கும்.
3 டி ஸ்கேன் என்றால் என்ன?
உடம்பில் ஒரு சின்ன இடம் விடாமல் துல்லியமாக துருவி எடுத்துவிடும்!
அதுதான் தேவை!
ராபின்சன் உடலை எக்ஸ்ரே எடுத்தார்கள்.
சார்! எதற்காக இவருக்கு எக்ஸ்ரே எடுக்குறீர்கள்?
இவனுடைய உடலில் முக்கியமான ஒன்றை தேடுகிறேன்!
டாக்டர்! அவன் தோள்பட்டையில் ஏதோ கறுப்பாக ஏதோ உலோகம் போலத் தெரிகிறது!

என்னவாக இருக்கும்?
மாண்ட்டிரிக் இது என்ன புதுக் குழப்பம்?
மாண்ட்டிரிக், கமிஷனர் இருவரும் ஆ
சரியப்பட்டார்கள்.
மாண்ட்டிரிக்! அவனுக்கு என்னாச்சு?
ஒன்றும் இல்லை ஒரு சிறிய ஆபரேஷன். அவ்வளவுதான்!
NO SMOKING PLEASE
ராபின்சனுக்கு ஒரு சிறிய ஆபரேசன் நடத்தப்பட்டது.
என்ன இது? வெளிநாட்டு உலோகம் போல இருக்கிறது! இது எப்படி இவன் உடம்புக் குள் வந்தது?
கமிஷனர்! ஒரு சிறிய ரேடியோ போன்ற சாதனம் அவன் தோள்பட்டையில் இருந்திருக்கிறது!
ராபின்சன் இது எப்படி தோள்பட் டைக்குள் வந்தது?
தோள் பட்டையிலா என்ன இது?
ராபின்சன் 'திருதிரு'வென்று விழித்தான்.
கடுகு போல இருந்தாலும் இதன் வேலை பெரியது!

இங்கிருந்து மற்றோர் இடத்துக்கு தகவல் சொல்லும் கருவி?
ஆ....!
இதை எதற்காக என் உடலில் வைத்திருக் கிறார்கள்?
உன்னை வைத்து என்னைப் பிடிக்க கொள்ளையர்கள் முயற்சி செய்திருக் கிறார்கள்!
விஞ்ஞானிகள் மிருகங்களின் வாழ்க்கையை தெரிந்துகொள் வதற்காக மிருகங்களை முதலில் துப்பாக்கியால் சுட்டு பிடிப்பார்கள்.
பிறகு, அதன் உடலில் இந்த எளிய ரேடியோ சாதனத்தை வைத்து தைத்துவிடுவார்கள்.
பிறகு மிருகம் உஷார் ஆனதும் காட்டுக்குள் ஓடிவிடும்! அந்த மிருகம் காட்டுக்குள் எங்கெல்லாம் செல் கிறதோ, அதை இந்தக் கருவி காட்டிக் கொடுத்துவிடும்!
அதை வைத்து அந்த மிருகத்தை பின்தொடர்ந்து அதன் நடவடிக்கை களை கவனிப் பார்கள்.

அப்படியானால் கொள்ளையர்கள் என்னை மிருகமாக நினைத்து விட்டார்கள்!
ஆமாம்: நீ ஒரு காட்டு மிருகம்!
இனிமேல் கொள்ளையர்கள் என்னைக் கண்டு பிடிக்க முடியாது.
இதேபோல்தான் 50 வருடத்துக்கு முன்பு சிறைச்சாலையில் ஒரு வெடிகுண்டு வெடித்து பல ஆயிரம் பேர் இறந்தார்கள்!
சார்! இவனை மருத்துவ மனையை விட்டு அப்புறப் படுத்த வேண்டும்! கொள்ளை யர்கள் நிச்சயமாக நம்மைச் சுற்றி இருப்பார்கள்!
உடனே ராபின்சனை அடையாளம் தெரியாதபடி மாற்றி கூட்டி வந்தார்கள்.
!
வெரிகுட்! பத்திரமாக இவனை கூட்டிச் செல்!
மருத்துவமனைக்கு வெளியில் ஒரு காரில் இருவர் இருந் தார்கள். அப்போது ராபின் சனை நர்சு வெளியில் கூட்டி வந்தாள்.
அவன் மருத்துவ மனையில் தான் இருக் கிறான்!
வா உள்ளே போகலாம!
பிங்...க்! பிங்க்...!
வேண்டாம்! அவனை வெளியே கூட்டி வருவார்கள்!
கொள்ளையர்கள் எப்படியும் மருத்துவமனையை சுற்றி இருப்பார்கள்.

வா! அவர்களை மடக்கிவிடலாம்!
இல்லை சார்! நான் வேறு ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்!
இதை வைத்து அந்த கூட்டத்தை எப்படியும் கூண்டோடு பிடித்து விடலாம்!
முடியுமா?
கெலிகாப்டர் விமானத்தை மருத்துவமனையை சுற்றி பறக்க விடவேண்டும்! அப்புறம் ஒரு நாய் வேண்டும்!
வெளியில்—
வா, உள்ளே போய் பார்த்து விடலாம்!
வேண்டாம்! அவனை வெளியில் கொண்டுவந்ததும் கதையை விடலாம்!
கொள்ளையர்கள் ஆளுக்கொரு யோசனை சொன்னார்கள்.
அடுத்த 5-வது நிமிடம் கெலிகாப்டர் ஒன்று மருத்துவமனையை வட்டமடித்தது.
மாண்ட்டிரிக் கெலிகாப்டர் வந்துவிட்டது! நாய் எதற்குக் கேட்டாய்?

இந்த ரேடியோ சாதனத்தை நாயின் கழுத்தில் கட்டிவிட வேண்டும்! அப்புறம் பாருங்கள்!
எனக்கு ஒன்றும் புரியவில்லையே!
விசிலை ஊதினால் போதும், ஓடுகிற நாய் அப்படியே நின்றுவிடும்!
கொள்ளையர்கள் வெளியில் இருக்கிறார்கள்.
அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி.
உன்னிடம் இருக்கும் ரேடியோவில் வரும் சத்தத்தை வைத்து அவர்களைப் பிடிக்க வேண்டும். போ!
மாண்ட்டிரிக் நாயை இறக்கி விட்டதும் நாய் வெளியே ஓடியது.
ஏய்! சத்தம் அதிக மாக கேட்கிறது. ராபின்சனை கொண்டு வருகிறார்கள்!
பிங்...ங்...!
பிங்க்...!
வயர்லெசில் வரும் சத்தத்தை வைத்து கொள்ளையர்கள் காரை ஓட்டினார்கள்
ராபின்சனை வெளியே கொண்டு வந்துவிட்டார்கள்!

என்ன இது சத்தம் மட்டும் வருகிறது! ரோட்டில் யாரையுமே காணோம்!
பிங்க்...!
பிங்க்...! பிங்க்...!
இங்கே, நமக்கு அருகில்தான் ராபின்சன் இருக்கிறான். சத்தம் மிக தெளிவாக இருக்கிறதே!
வயர்லெசை வெளியே நீட்டிப் பார்த்த கொள்ளையர்கள், அருகில் ஓடிக்கொண்டிருக்கும் நாயை கவனிக்க வில்லை.
பிங்க்...! பிங்க்...!
அவர்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்த மாண்ட்டிரிக் விசிலை ஊதினார்.
ப்பூ...! ப்பூ...!
விசில் சத்தத்தைக் கேட்டதும் நாய் அப்படியே— அந்த இடத்திலேயே உட்கார்ந்துவிட்டது.
அவன் இங்கேதான் எங்கோ நிற்கிறான்!
பிங்க்...! பிங்க்...! பிங்க்...!

கமிஷனர்! உங்கள் ஆட்கள் தயாராக இருக்கட்டும்! கொள்ளையர்களை கண்டுபிடித்து விட்டேன்!
ஏய்! ... மிகத் ... கேட்கிறது. ... இப்போது ஒரு இடத்தில் நிறுத்தி யிருக்கிறார்கள்!
PITAL
பிங்க்...! பிங்க்...! பிங்...!
கொள்ளையர்களில் ஒருவன் தற்செயலாக நாயை கவனித்தான்.
ஏய்! அந்த நாயின் கழுத்தைப் பார்!
இது எப்படி நாயின் கழுத்திற்கு வந்தது?
அதுதான் எனக்கும் புரியவில்லை!
கொள்ளையர்கள் குழம்பினார்கள்.

கொள்ளையர்கள் நாயை கண்டுகொண்டதும், மாண்ட்டிரிக் விசிலை ஊதினார்.
ப்பூ...!
ப்பூ...!
விசில் சத்தத்தைக் கேட்டதும் நாய் திரும்பி மருத்துவமனையை நோக்கி ஓடிவந்தது.
என்ன நடக்கிறது! ஒரே குழப்பமாக இருக்கிறது!
வா! அக்டனுக்கு தகவ கொடுப்போம்!
கமிஷனர்! அந்த காரை பின்தொடர்ந்து கெலிகாப்டரை பறக்கச் சொல்லுங்கள்!
ஓ.கே. மாண்ட்டிரிக்
அக்டன்! ராபின்சனை மருத்துவமனையில் காண வில்லை! அவன் உடம்பில் வைத்த இரகசிய சாதனம், ஒரு நாயின் கழுத்தில்...!
அக்டனுக்கு தகவல் கொடுத்தார்கள்
நாயின் கழுத்திலா! குடித்துவிட்டு உளறுகிறீர்களா?

உண்மையைத்தான் சொல்கிறீர்களா? அப்படியானால் வேகமாக புறப்படுங்கள்
கொள்ளையர்களின் கார் சீறிப் பறந்தது.
ஓ.கே. சார்! இப்போதே கிளம்புகிறோம்.
நாய் ஓடிவந்து மருத்துவமனையை அடைந்தது.
திறமையான நாய்தான் இது!
இந்த மருத்துவ மனையில் இப்போது இவர்தான் கதாநாயகன்!
காரை தொடர்ந்து செல்லுங்கள்! விட்டு விடாதீர்கள்!
ஓ.கே. சார்!
POLICE
கமிஷனர் கெலிகாப்டருக்கு அடிக்கடி தகவல் கொடுத்துக்கொண்டே இருந்தார்.
அக்டனிடம் இருந்து கட்டளை வந்தது.
விரைவாக நம் இடத்துக்கு வந்து விடுங்கள்! வேறு எந்த காரும் உங்களை பின் தொடர வில் லையே?

இல்லை சார்! நாங்கள் உடனே வந்து சேர்ந்து விடுகிறோம்!
கொள்ளையர்களின் கார் ஒரு காரேஜுக்கு முன் வந்து நின்று ஒலி எழுப்பியது.
GARAGE
PARK HERE
NO ADMITTANCE FILLED UP
பீப்... பீப்...
சார்! வடக்கு நகர எல்லையில் உள்ள ஒரு காரேஜுக்குள் கார் செல்கிறது!
POLICE
கெலிகாப்டரில் இருந்து தகவல் வந்தது.
வடக்கு எல்லையில் உள்ள காரேஜ்!
ஓகோ! அதுதான் கொள்ளையர்களின் தலைமை இடமா?
மாண்ட்டிரிக் சுறுசுறுப்பானார்.
உடனே கமிஷனர், மாண்ட்டிரிக், லோதர் மூவரும் ஒரு போலிஸ் படையுடன் அந்த காரேஜுக்கு வந்தார்கள்.
இதுதான் கொள்ளையர்களின் தலைமை இடம்!
மரியாதையாக சரணடைய சொல்வோம்!
POLICE
அவ்வளவு எளிதில் அவர்கள் சரணடைய மாட்டார்கள்! அவர்களுடன் போராடினால்தான் அவர்களை மடக்க முடியும்!


சார்! நானும், லோதரும் அதை கவனித்துக் கொள்கிறோம்!
மாண்ட்டிரிக் காரை காரேஜுக்கு அருகில் கொண்டு சென்று ஒலி எழுப்பினார்.
நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்? இங்கு நின்று பிரயோஜனம் இல்லை!
அப்படியா...! உள்ளே என்ன இருக்கிறது?
நான் அடிக்கடி இந்தப் பக்கமாக போய் வருவேன்! இதுவரை உள்ளேயிருந்தும் வெளியே இருந்தும் கார் வந்ததை நான் பார்த்த தில்லை!
ரொம்ப நன்றி சார்! நாங்கள் வருகிறோம்!
NO ADMITTANC
அவர் சென்றதும், மாண்ட்டிரிக் திரும்பி காரேஜுக்கு வந்தார்.
லோதர்! தயாராக இரு!
ஓ.கே. மாண்ட்டிரிக்!

ஹாங்க்...!
ஹாங்க்....!
கதவை திறங்கள்!
தட்... தட்...!
மாண்ட்டிரிக் காரேஜின் கதவைத் தட்டினார்
காரேஜின் கதவு திறந்ததும், நீங்கள் துப்பாக்கியுடன் தயாராய் இருங்கள்!
கமிஷனர் போலீசாருக்கு கட்டளையிட்டார்.
போலீசார், கெலிகாப்டரிலும், காரிலும் தயாராய் இருந்தார்கள்.
கதவைத் திறந்த விநாடி, நாம் உள்ளே புகுந்து விட வேண்டும்!
தட்...!
BAM தட்...!
மாண்ட்டிரிக் விடாமல் காரேஜை தட்டினார்.
டுத்த நிமிடம்—
காரை நிறுத்த ஓர் இடம் வேண்டும்!
உள்ளே இடமில்லை! வேறு எங்காவது போய் கேளு!
NO ADMITTANCE FILLED UP
பாக்கியுடன் வெளிவந்த ஒருவன் கோபமாக சொன்னான்.

உள்ளே இருப்பவர்கள் ஏன் துப்பாக்கியுடன் இருக்கிறீர்கள்?
அது உனக்கு தேவையில்லாதது!
நான் இப்போது இந்த கதவைத் திறக்கிறேன் பார்!
சிம்...பூம்...பா...! கதவை திற!
மாண்ட்டிரிக் ஏதோ மந்திரத்தைச் சொல்ல, அடுத்த நிமிடம் கதவு திறந்துகொண்டது.
சிம்...பூம்...பா!
நான் பட்டனை அமுக்கவில்லை! பிறகு எப்படி கதவு திறந்தது! இவனிடம் மாயசக்தி இருககிறதா?
பார்த்தாய் அல்லவா? கதவை எப்படித் திறந்தேன் என்று. ஜாக்கிரதை!

இப்போதுதான்
கதவை
உண்மையிலேயே
திறக்கிறேன்!
கதவை திறக்கும் பட்டனை
மாண்ட்டிரிக் அழுத்தினார். முரடன்
வெலவெலத்துப் போய் இருந்தான்.
லோதர், காரை காரேஜுக்குள் ஓட்டிவந்தான்.
மாண்ட்டிரிக் கதவை
திறந்துவிட்டா
அவரிடமிருந்து சிக்னல்
வந்ததும் காரை
கிளப்புங்கள்!
கமிஷனர் கட்டளையிட்டார்.

சுலபமாக உள்ளே வந்துவிட்டோம்! இனிதான் பிரச்சினை!
சமாளித்துக் கொள்ளலாம் லோதர்!
கொள்ளையர்களின் பாது காப்பு அறை டி.வி.யில் காரேஜுக்குள் மாண்ட்டிரிக் நுழைந்தது தெரிந்தது.
புதிதாக யாரோ வருகிறார்கள்! அவசர மணியை அடிக்க வேண்டும்!
ரிங...! ரிங...!
கொள்ளையர்கள் தலைமையிடத்தில்-
என்ன மணி அடிக்கிறது?
எதிரி நம் கோட்டைக்குள் நுழைந்திருக்கிறான்!
கட்டளையிடுங்கள்! காத்திருக்கிறோம்!
குண்டுமாரி பொழிந்து அவர்களை அழியுங்கள்!
அக்டன் கட்டளையிட்டது.

அக்டன் கட்டளை காரேஜுக்குள் எதிரொலித்தது.
சுட்டுத் தள்ளுங்கள்!
லோதர் வெளியே குதி!
இருவரும் காரில் இருந்து வெளியே பாய்ந்தார்கள்!
ஙீல்
ஙீல்
சுவரில் இருந்து துப்பாக்கி தலையை மட்டும் வெளியே நீட்டி அவர்களை நோக்கி குண்டுகளை உமிழ்ந்தது.
டுமீல்...! டுமீல்...!
POLICE
POLICE
அடுத்து, போலீசாரின் கார்களும் கொடர்ந்து காரேஜுக்குள் நுழைந்தன.
100க்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் முழங்கின.
லோதர்! பார்த்து செயல்படு!
மாண்ட்டிரிக்! இந்தப் பக்கம் வந்துவிடு!
டுமீல்...! டுமீல்...!
மாண்ட்டிரிக் வந்த கார் குண்டுகளால் துளைக்கப் பட்டு சின்னாபின்னமாகியது.
டமால்

இருவரும் ஒரு மறைவிடத்தில் ஒதுங்கிய நேரம், கார் படுபயங்கரமாக வெடித்துச் சிதறியது.
டமார்...!
ஆட்டோமேட்டிக் முறையில் அவர்கள் இருவரையும் தூள் தூளாக்கிவிட்டோம்!
சார்! அவர்களை அழித்துவிட்டோம்!
அப்படியா! மிக்க மகிழ்ச்சி!
இன்னும் சிறிது நேரத்தில் போலீசாரும் உள்ளே வந்துவிடுவார்கள்!
அவர்களை தடுக்க வேண்டும்!

லோதர்! ... ஒருவன் ...ரோல் ரூமில் இருந்து ...தியை பரப்புகிறான். அவனை முதலில் பிடி!
போலீசாரின் கார்கள் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன.
பத்துக்கும் மேற்பட்ட கார்களில் போலீசார் ஆயுதங்களுடன் இருந்தார்கள்.
கண்ட்ரோல் ரூமை தேடி லோதர் வந்தான்.
ஆ... போலீசார் வருகிறார்கள்! அவசர மணியை அடிக்க வேண்டும்!
அப்போது லோதர் அங்கு வந்தான்.
அவர்களை அழித்தது போலவே இவர்களையும் அழிக்க வேண்டும்.
ராஸ்கல்...! உன்னை உயிரோடு விட்டால்தானே அவர்களை அழிப்பாய்!
கும்....
லோதர் ஓங்கி ஓர் குத்துவிட்டான்.

அதற்குள் போலீசார் துப்பாக்கியுடன் இறங்கினார்கள்.
இனி ஒரு நிமிடம் தாமதிக்கக் கூடாது! அக்டனை உடனே மடக்க வேண்டும்!
!
முட்டாள்! இன்னும் ஏன் உட்கார்ந்து இருக்கிறீர்கள்? போலீசார் வந்துவிட்டார்கள்! ஓடுங்கள்! இல்லை சாக வேண்டியதுதான்!
!!!
!!!
அக்டன் அப்படிச் சொல்லியதும் அங்கிருந்த எட்டு பேரும் எழுந்து ஓடத் தொடங்கினார்கள்.
ஐந்து நிமிடத்தில் தலைமறைவாகி விடுங்கள்!
அக்டனின் கட்டளை எதிரொலித்தது.

என்ன இது? யார் பேசுவது?
இந்த அறையில் இருந்துதான் சத்தம் வருகிறது!
சுறுசுறுப்பாக ஓடுங்கள்! இன்னும் நான்கு நிமிடம்தான் இருக்கிறது! 8 பேரும் தலை தெறிக்க ஓடினார்கள்.
அவர்கள் 8 பேரும் கதவைத் திறந்துகொண்டு வெளியே வர, அங்கே லோதர் அவர்களை வரவேற்க நின்றான்.
மெதுவாக வா!
கும்!
!
லோதர்! எட்டு பேரில் யாரையும் விட்டு விடக் கூடாது!
ஆமாம்! விட்டுவிடாதே!
மாண்ட்டிரிக், கமிஷனர், லோதர் மூவரும் அக்டன் அறைக்குள் வந்தார்கள்.
வா மாண்ட்டிரிக்! இந்த முறை நீ இங்கிருந்து தப்ப முடியாது!
இன்னும் மூன்று நிமிடத்தில் அனைவரும் சாகப் போகிறீர்கள்!
ஆ! அது எப்படி?

அக்டர்! பைத்தியக்காரத்தனமாக உளறாதே!
யார் பைத்தியம்! இன்னும் மூன்று நிமிடத்தில் சாகப் போகிற நீதான் பைத்தியம்!
இது எதை வைத்து சொல்கிறது!
தாமதிக்கிற ஒவ்வொரு நிமிடமும் ஆபத்துதான்!
பொய்...!இல்லை கமிஷனர்! முதலில் உங்கள் ஆட்களை வெளியேறச் சொல்லுங்கள்!
லோதர்! யாரையும் விட்டுவிடாதே! கவனம்!
இன்னும் மூன்று நிமிடந்தான்! அதற்குள்...!
எழுந்திரு! வாடா!
உள்ளே வெடிகுண்டு இருக்கிறது என நினைக்கிறேன்.

சீக்கிரம் போ!
படார்...!
படார்...!
படார்...!
திடீரென்று எல்லா அறைக் கதவுகளும் மூடிக்கொண்டன.
தாமதித்துவிட்டாய் மாண்ட்டிரிக்! நான் எல்லா அறைக் கதவுகளையும் பூட்டி விட்டேன்! இனி யாரும் தப்பிக்க முடியாது!
ஆ...!
நான் மட்டும் ஆற்றில் குதித்து தப்பிவிடுகிறேன்!
லோதர்! நீயும் அவனுடன் போ!
அக்டன்! நீ புத்தி சாலித்தனமாக நடந்து கொண்டதாக நினைக் காதே! நான் மீண்டும் வருவேன்! ஜாக்கிரதை!

அடுத்த நிமிடம் மாண்ட்டிரிக் கதவை உடைத்துக்கொண்டு வெளியே பாய்ந்தார்.
ஆ...தப்பிவிட்டான்.
மாண்ட்டிரிக் நேராக ஆற்றுக்குள் பாய்ந்தார்.
அடுத்த நிமிடம் அந்த மர்ம மாளிகை வெடித்துச் சிதறியது.
டமால்
கொள்ளையர்களின் கதை முடிந்தது!
எட்டு பேரையும் பிடித்து விட்டோம்!
இல்லை சார்! கொள்ளையர்களின் அச்சாணி அக்டனைப் பிடித்தால்தான் நிம்மதி! எங்கே போய் விடுவான்?
(முடிந்தது)

முட்டாள் இளைஞன்!

-பேராசிரியர் எ. சோதி

ஒருநாள், ஒரு இளைஞன் அதிகாரி ஒருவரிடம் வந்து, தனக்கு ஏதாவது வேலை தருமாறு கேட்டான்.

இளைஞனின் தோற்றத்தை மேலும் கீழும் பார்த்த அதிகாரி, "உனக்கு என்ன வேலை தெரியும்?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "ஐயா! நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதன்படியே சிறிதுகூட மாறாமல் செய்வேன்" என்றான்.

வந்தவனை முட்டாள் என்று அறியாத அதிகாரியும் அவனை வேலைக்காரனாக வைத்துக் கொண்டார்.

ஒருநாள் வழக்கம்போல அதிகாரி அலுவலகத்தில் இருந்தார். அப்போது,

"ஐயா! ஐயா!" என்று அலறிக்கொண்டு அந்த இளைஞன் ஓடிவந்தான்.

என்னவோ, ஏதோ என்று பயந்துபோன அதிகாரி "என்ன நடந்தது?" என்று கேட்டார்.

"உங்க மாமனார் ஊரிலே இருந்து வந்திருக்கிறாராம். அலுவலகம் முடிந்ததும் அம்மா உங்களை நேராக வீட்டுக்கு வரச் சொன்னாங்க. அதைச் சொல்லத்தான் வந்தேன்" என்று சொன்னான்.

இதைக் கேட்ட அவர் "இனிமேல் இப்படி ஏதாவது செய்தி சொல்ல வேண்டும் என்றால் வெளியே போட்டிருக்கும் பலகையில் உட்கார்ந்து இரு. என் அறை வேலையாளிடம் நீ வந்திருப்பதாகச் சொல்லி அனுப்பு. நான் உன்னை அழைக்கிறேன். இப்பொழுது நுழைந்ததைப் போல திடுதிப்பென்று என் அறைக்குள் நுழையாதே. புரிந்ததோ?" என்றார்.

அவனும் தலையாட்டிவிட்டு வீடு வந்து சேர்ந்தான்.

இரண்டு நாட்கள் சென்றன.

வேலைக்காரன் எந்தப் பரபரப்பும் இல்லாமல் மீண்டும் அலுவலகத்துக்கு வந்தான். வெளியில் இருந்த பலகையில் கால் மேல் கால் போட்டு அமர்ந்தான்.

அங்கிருந்த வேலையாளிடம் தான் வந்திருப்பதாக அதிகாரிடம் சொல்லச் சொன்னான்.

அவரும் தன் வேலைகளை எல்லாம் முடித்த பின்னர்

வேலைக்காரனை வரவழைத்து "என்ன நடந்தது?" என்று கேட்டார்.

"ஐயா! வீட்டு வைக்கோல்போர் தீப்பிடித்து எரிந்துவிட்டது. மாடும் கன்றும் கூட தீயில் இறந்துவிட்டன. அம்மா உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்" என்று மிக அமைதியாகச் சொன்னான் வேலைக்காரன்.

"அடே! அழுது புலம்பிக்கொண்டு ஓடிவந்து சொல்ல வேண்டிய செய்தியை இப்படி அமைதியாகச் சொல்கிறாயே, உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கத்தினார்.

அதற்கு அந்த வேலைக்காரன், "ஐயா! நீங்கள் இப்பொழுது சொன்னபடியே நான் இனிமேல் நடந்துகொள்வேன். என்னை மன்னித்துவிடுங்கள்" என்றான்.

சில நாட்கள் சென்றன.

ஒருநாள் அந்த இளைஞன் அழுது புலம்பிக்கொண்டு, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலுவலகத்தில் நுழைந்தான்.

"என்ன நடந்தது?" என்று பரபரப்புடன் கேட்டார் அதிகாரி.

"ஐயா! தந்தி வந்துள்ளது" என்றான் வேலைக்காரன்.

"தந்தியில் என்ன எழுதியிருந்தது?" என்று கேட்டார்.

"உங்க மகளுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்று தந்தி

வந்துள்ளது" என்று அழுதுகொண்டே சொன்னான்.

"ஏன்டா! இதையா அழுதுகொண்டே வந்து சொல்கிறாய்? எல்லாருக்கும் இனிப்பு கொடுத்து மகிழ்ச்சியோடு சொல்ல வேண்டிய செய்தி அல்லவா இது" என்றார் அதிகாரி.

"நீங்க சொன்னது போலவே இனி நான் கவனமாக நடந்துகொள்கிறேன்" என்றான் வேலைக்காரன்.

ஒரு வாரம் கழிந்தது.

பெரிய இனிப்புப் பொட்டலத்துடன் அலுவலகம் வந்தான் அந்த வேலைக்காரன். சிரித்துக்கொண்டே எல்லோருக்கும் இனிப்பு கொடுத்தான். பிறகு அதிகாரியின் அறைக்குள் நுழைந்தான். அவரும் இனிப்பை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, "இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாயே, என்ன நடந்தது?" என்று கேட்டார்.

அதற்கு வேலைக்காரன் சிரித்துக்கொண்டே, "ஐயா! உடம்பு சரியில்லாமல் உங்கம்மா இருந்தார்களே, அவர்கள் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி செத்துட்டாங்க" என்று மகிழ்ச்சியாகச் சொன்னான்.

அவ்வளவுதான் அவர், "உன்னைப் போல முட்டாளை வேலைக்கு வைத்தேனே, என்னைச் சொல்லணும். இனி என் வீட்டில் உனக்கு வேலை கிடையாது; எங்காவது ஓடிப்போ" என்று கத்தினார்.

வேலை போன அவன், 'அவர் சொன்னபடிதானே செய்தேன். எதற்காக என்னை வேலையைவிட்டு நீக்கினார்?' என்பது புரியாமல் சென்றுகொண்டு இருந்தான், அந்த முட்டாள் இளைஞன்.

★

கண்டுபிடியுங்கள் - 11

ரூ.500 பரிசு!

அவன் யார்?

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுப் பாருங்கள். அவற்றின் பெயர்களில் இருந்து ஓர் எழுத்தை மட்டும் எடுத்து சேர்த்துப் பாருங்கள். வீரமன்னனை தூக்குக்கு அனுப்பியவனின் பெயர் கிடைக்கும். அவன் யார்? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!



RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

மாயாவியின் பாதுகாப்பில் உள்ள கருவூலத்தை திருடிச் செல்ல மூன்று பேர் திட்டம் போடுகிறார்கள்! முயற்சி பலித்ததா?

அடுத்த காமிக்ஸ்

ஆகஸ்டு 16-ந் தேதி 'ராணி காமிக்ஸ்' வாங்கிப் பாருங்கள்.